## மரவள்ளிக்கிழங்கு அறுவடையின் போது நிலையாக இருக்கும்

தமிழ்நாடு, மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் 61.17 சதவீதம் பங்களிப்புடன் நாட்டில் முதலிடம் வகிக்கிறது. 2013-14ல், மரவள்ளிக்கிழங்கு 0.12 மில்லியன் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 4.17 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இதுவே, 2014-15ல் தமிழகத்தில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி, 5.18 மில்லியன் டன்கள் ஆகும். இது 2013-14ஆம் ஆண்டு உற்பத்தியை விட 4.28 சதவீதம் அதிகரித்துள்ளது. மரவள்ளிக்கிழங்கு தயாரிப்புகள் ஓமன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது, ஆனால் நடப்பாண்டில் ஏற்றுமதிக்கான தேவை குறைந்துள்ளது.

நாமக்கல், தருமபுரி மற்றும் சேலம் ஆகியவை மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். மரவள்ளி பொதுவாக நவம்பர் - டிசம்பர் மற்றும் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டு, பருவ மழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் அறுவடை செய்யப்படுகிறது. அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யப்படுகிறது. மரவள்ளிக்கிழங்கின் விலை அதன் மாவு சதவீதத்திற்கு ஏற்ப கணக்கிடப்படுகிறது. தற்போது மரவள்ளிக்கிழங்கு டன்னிற்கு பண்ணை விலையாக ரூ.3600 முதல் 3800 வரை விற்கப்படுகிறது. தற்போது மரவள்ளிக்கிழங்கு மாவு 90 கிலோ மூட்டை ரூ.1600க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்தாண்டு இது ரூ.2500 வரை விற்கப்பட்டது. விவசாயிகளுக்கு, நடப்பாண்டில் மரவள்ளிக்கிழங்கிற்கான விலை கடந்தாண்டை விட குறைவாகவே கிடைத்தது. இதற்கு காரணம் மரவள்ளி உற்பத்திக்கு சாதகமான பருவமழை மற்றும் சாகுபடி பரப்பு அதிகரித்ததேயாகும்.

இந்த சூழ்நிலையில், வரும் ஜனவரி – பிப்ரவரி, 2016 மாதங்களில் அறுவடைக்கு வரும் மரவள்ளிக்கிழங்கிற்கான விலை நிலவரம் பற்றி அறிய ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 15 வருடங்களாக சேலம் சந்தைகளில் நிலவிய விலை பற்றி ஆய்வு மேற்கொண்டது.

எனவே, வருகின்ற ஜனவரி – பிப்ரவரி, 2016 மாதங்களில் அறுவடையாகும் மரவள்ளிக்கிழங்கிற்கு, டன் ஒன்றுக்கு பண்ணை விலையாக ரூ.3700 முதல் ரூ.3900

வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விலை உயர்விற்கான வாய்ப்பு குறைவாக உள்ளதால் விவசாயிகள் தங்கள் விற்பனை முடிவுகளை உடனடியாக எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

கோயம்புத்தூர் - 641 003

தொலைபேசி – 0422 -2431405


## மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :


பேராசிரியர் மற்றும் தலைவர்

காய்கறிப் பயிர்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

கோயம்புத்தூர் - 641 003

தொலைபேசி – 0422 -6611374,

0422 -6611283